வெற்றியின் தமிழில்
TNPSC GATEWAYY
தினசரி நடப்பு நிகழ்வுகள் மே, 1 – 31–2023

# 1. வரலாறு

## 1.1. முக்கிய தினங்கள்

### சென்னையில் மே தினக் கொண்டாட்டத்தின் நூற்றாண்டு விழா–மே 1

- மதராஸ் மாகாணத்தில் (சென்னை) **முதலாவது மே தினமானது, 1923** ஆம் ஆண்டில் தொழிற்சங்கத் தலைவர் **M.சிங்காரவேலு** அவர்களால் கொண்டாடப்பட்டது.
- **தொழிலாளர் கிசான் கட்சியானது** மதராஸ் மாகாணத்தில் மே தினக் கொண்டாட்டங்களை அறிமுகப்படுத்தியது.
- இந்தக் கூட்டத்திற்கு தோழர் சிங்காரவேலர் தலைமை தாங்கினார்.

### சிங்காரவேலர்

- **'சிந்தனைச் சிற்பி'** என்று அறியப்பட்ட இவர், தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் ஆவார்.
- 1925 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், கான்பூர் நகரில் நடைபெற்ற முதல் கம்யூனிஸ்ட் மாநாட்டிற்கு அவர் தலைமை தாங்கினார்.

### குறிப்பு:

- **தமிழகத்தில் 1967 ஆம் ஆண்டில், மே தினத்தினை முதன்முதலில் விடுமுறை நாளாக** அறிவித்தது தி.மு.க. அரசு.

### ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் வீரர்களின் சர்வதேச தினம் – மே 29

- இது **2002 இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால்** நிறுவப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் பணியாற்றும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அஞ்சலி செலுத்துவதும், அமைதிக்காக உயிர்நீத்தவர்களைக் கௌரவிப்பதும் இதன் நோக்கமாகும்.
- 2023 நோக்கம்–"**அமைதி என்னில் இருந்து தொடங்குகிறது**"
- இந்த ஆண்டு ஐநாவின் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

### உலக புகையிலை எதிர்ப்பு தினம் – மே 31

- இது புகையிலை உட்கொள்வதால் ஏற்படும் உடல்நல அபாயங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- **உலக சுகாதார நிறுவனம் 1987** – இல் உலகளாவிய அனுசரிப்பு தினத்தை உருவாக்குவதற்கான தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது.
- முதல் உலக புகையிலை எதிர்ப்பு தினம் மே 31, 1988 அன்று அனுசரிக்கப்பட்டது.
- **2023 இன் கருப்பொருள்** "எங்களுக்கு தேவை உணவு, புகையிலை அல்ல".

குறிப்பு

- சீனாவுக்கு அடுத்தபடியாக பீடி, சிகரெட் அதிகம் உற்பத்தி செய்யும் நாடு இந்தியா.

## 1.2. மாநிலங்களின் சுயவிவரம்

### அதிகக் கடன் பெறும் மாநிலங்கள்

- **இந்திய ரிசர்வ் வங்கியின்** தகவலின் படி, **தமிழ்நாடு தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக கடன் பெறும் மாநிலங்களில் முதலிடத்தில்** உள்ளது.
- கடந்த 2022–23 ஆம் நிதியாண்டின் முதல் 11 மாதங்களில் தமிழகம் சுமார் ரூ.68 ஆயிரம் கோடிகள் அளவிற்குக் கடனைப் பெற்றுள்ளது.
- **தமிழகத்திற்கு அடுத்தபடியாக ஆந்திரா** ரூ.51,860 கோடியும், **மகாராஷ்டிரா** ரூ.50 ஆயிரம் கோடியும் கடனாகப் பெற்றுள்ளன.
- **கடந்த 2 நிதியாண்டுகளிலும் அதிகக் கடன் பெற்ற மாநிலமாக தமிழ்நாடு** இருந்தது.
- இந்த இரண்டு நிதியாண்டுகளுடன் ஒப்பிடும்போது, 2022–23 ஆம் நிதியாண்டில் தமிழகத்தின் கடன் சற்று குறைந்துள்ளது.

குறிப்பு:

- அதே நேரத்தில், மத்திய நிதிக் குழு பரிந்துரைத்தக் கடன் தொகையை விட, தமிழகம் குறைவாகவே கடன் பெற்றுள்ளது.

### தமிழ்நாடு–உலக மக்கள் சுகாதாரச் சேவையினைப் பெறும் இடம்

- முதல்வர் இரண்டு நாட்கள் அளவிலான **மருத்துவ மதிப்பு சார் பயண மாநாட்டினைத் தொடங்கி** வைத்தார்.
- இந்த நிகழ்ச்சி, **'தமிழ்நாடு –உலக மக்கள் சுகாதாரச் சேவை பெறும் இடம்'** என்று அழைக்கப் படுகிறது.
- இந்த **நிகழ்ச்சியினை சுற்றுலா மற்றும் சுகாதாரத் துறைகள்** இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.
- இது 21 மூல ஆதார நாடுகளில் உள்ள மருத்துவமனைகளை தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகளுடன் ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

குறிப்பு:

- ஏற்கனவே **தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவச் சுற்றுலாவின் மையம்** எனக் கருதப்படுகின்றது.

### இந்தியாவின் முதல் கம்பிவடந்தாங்கி இரயில் பாலம்

- **"அஞ்சி காட் பாலம்"** என்றழைக்கப்படும் **நாட்டின் முதல் கம்பி வடந்தாங்கி இரயில் பாலமானது** தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- இந்தக் கம்பி வடந்தாங்கி இரயில் பாலமானது 96 கம்பிவடங்களைக் கொண்டுள்ள நிலையில் இதில் கம்பிவட இழைகளின் மொத்த நீளம் 653 கி.மீ. ஆகும்.
- இது **ஜம்மு காஷ்மீர்** பகுதியில் உள்ள **கத்ரா மற்றும் ரியாசி** ஆகிய பகுதிகளை **இந்திய இரயில்வே சேவை** மூலம் இணைக்கும்.
- இந்தப் பாலமானது, **"உதாம்பூர்–ஸ்ரீநகர்–பாரமுல்லா இரயில் இணைப்பு (USBRL) திட்டம்"** என்ற தேசியத் திட்டத்தின் ஒரு பகுதியாக கட்டமைக்கப்பட்டது.

## 1.3. பாதுகாப்பு

### ஆசியான் இந்தியா கடல்சார் பயிற்சி (AIME–2023)

- **AIME–2023** பயிற்சி மே 2 முதல் 8 வரை இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது.
- **INS சத்புரா** மற்றும் **INS டெல்லி** ஆகிய இரண்டு **இந்திய கடற்படைக் கப்பல்களும்** பயிற்சியில் பங்கேற்றன.
- கடற்படை பயிற்சியின் **துறைமுக கட்டம்** மே 2 முதல் 4 வரை **சாங்கி கடற்படை தளத்தில்** நடைபெற்றது. **தென் சீனக் கடலில்** மே 7 முதல் 8 வரை **கடல் கட்டமும்** நடத்தப்பட்டது.
- இந்தப் பயிற்சியானது **இந்திய கடற்படை** மற்றும் **ஆசியான் கடற்படைகள்** நெருக்கமாக பணிபுரியவும், கடல்வழியில் தடையற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வாய்ப்பளிக்கும்.
- இதில் பங்கேற்கும் கப்பல்கள், சிங்கப்பூர் துறைமுகத்தில் **சர்வதேச கடல்சார் பாதுகாப்பு கண்காட்சி (IMDEX–23)** மற்றும் சிங்கப்பூரில் நடத்தப்படும் சர்வதேச கடல்சார் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்கும்.

**குறிப்பு:**

- **ஐஎன்எஸ் டெல்லி**, இந்தியாவின் முதல் உள்நாட்டில் கட்டப்பட்ட வழிகாட்டப்பட்ட ஏவுகணை அழிப்பான் ஆகும்.
- **ஐஎன்எஸ் சத்புரா**, உள்நாட்டிலேயே கட்டப்பட்ட வழிகாட்டப்பட்ட ஏவுகணை போர்க்கப்பலாகும்.
- **விசாகப்பட்டினத்தில்** உள்ள **இந்திய கடற்படையின் கிழக்கு கடற்படை அலகில்** இந்த இரு கப்பல்களும் உள்ளன.

### ASEAN பற்றி

ASEAN – **தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம்.**

- 1967 இல் **பாங்காக்கில் (தாய்லாந்து)** நிறுவப்பட்டது.
- பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் மற்றும் கலாச்சார வளர்ச்சியை விரைவுபடுத்தவும், பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்தவும் அமைக்கப்பட்டது.
- **ASEAN நாடுகள்** – புருனே, கம்போடியா, இந்ததோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் வியட்நாம்.

### அஜெயா வாரியர் – 2023

- **இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு** ஆகிய நாடுகளின் இராணுவப் படைப்பிரிவுகள் 7வது **'அஜெயா வாரியர் 2023'** என்ற பயிற்சியினைத் தொடங்கியுள்ளன.
- அஜெயா வாரியர் என்பது ஐக்கியப் பேரரசில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, இரு நாடுகளிலும் மாறி மாறி நடத்தப்படுகின்ற ஒரு பயிற்சியாகும்.

### குறிப்பு:

- இதற்கு முந்தையப் பயிற்சியானது, 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தியாவில் உத்தரகாண்டின் சௌபாதியா என்னுமிடத்தில் நடைபெற்றது.

### ஐஎன்எஸ் மகர் ஓய்வு

- இந்தியக் கடற்படையின் பழமையான, **கடற்கரையில் நிலை நிறுத்தும் வகையிலான (ஆயுதந்தாங்கி) கப்பலான ஐஎன்எஸ் மகர்** சமீபத்தில் படையிலிருந்து நீக்கப்பட்டது.
- இது 36 ஆண்டுகளாக நாட்டுக்கு மதிப்பு மிக்கச் சேவையினை வழங்கி வந்தது.
- **1984ஆம்** ஆண்டு நவம்பர் 16 ஆம் தேதியன்று **ஐஎன்எஸ் மகர் படையில்** இணைக்கப்பட்டது.
- நிலம்–நீர் சார்ந்தப் பயிற்சிகள் மற்றும் மனிதாபிமான உதவி நடவடிக்கைகள் மற்றும் சமுத்திர சேது உள்ளிட்ட நடவடிக்கைகளில் இந்தக் கப்பல் பங்கேற்றுள்ளது.

### குறிப்பு:

- 2018 ஆம் ஆண்டில், இந்தக் கப்பல் பயிற்சிக் கப்பலாக மாற்றப்பட்டு, கொச்சியில் உள்ள முதல் பயிற்சிப் படையில் இணைந்தது.

### பொக்ரான்–2 சோதனையின் 25 வது ஆண்டு நிறைவு

- **1998ஆம் ஆண்டு மே 11** ஆம் தேதியன்று, **இந்திய இராணுவத்தின் பொக்ரான் சோதனைத் தளத்தில்** இந்தியா **மூன்று அணுகுண்டு சோதனை வெடிப்புகளை** நடத்தியது.
- இரண்டு நாட்களுக்குப் பிறகு, மே 13 ஆம் தேதியன்று, மேலும் இரண்டு குண்டுகள் சோதனை செய்யப்பட்டன.
- **ஆபரேஷன் ஷக்தி** என்ற குறியீட்டுப் பெயரில் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சோதனையானது **அணுக்கருப் பிளவு மற்றும் வெப்ப அணுசக்தி ஆயுதங்களை உருவாக்கும்** இந்தியாவின் திறனை வெளிப்படுத்தியது.

### பொக்ரான்–1 பற்றி

- **1974 ஆம் ஆண்டு மே 18** ஆம் தேதியன்று, **இந்திரா காந்தி** அவர்களின் ஆதரவுடன், இந்தியா தனது **முதலாவது அணுகுண்டு சோதனையை பொக்ரான் சோதனை தளத்தில்** நடத்தியது.
- **பொக்ரான்–1** சோதனைக்கு **ஆபரேஷன் ஸ்மைலிங் புத்தா** (சிரிக்கும் புத்தர் நடவடிக்கை) என்ற குறியீட்டுப் பெயர் வழங்கப்பட்டது.

### ஐ.என்.எஸ் விக்ராந்த்

- **இந்தியாவிலேயே கட்டமைக்கப்பட்ட ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க் கப்பலில் மிக்–29 கே போர் விமானம் இரவில் தரையிறங்கி** சாதனை படைத்துள்ளது.
- ரஷியாவிடம் இருந்து வாங்கப்பட்ட மிக்–29 கே போர் விமானமும், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இலகு ரக தேஜஸ் போர் விமானமும் கடந்த பிப்ரவரி மாதம் பகல் நேரத்தில் விக்ராந்த் போர்க் கப்பலில் தரையிறக்கப்பட்டது.

### குறிப்பு:

- முதல் முறையாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விமானம் தாங்கி போர்க் கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த்தை பிரதமர் மோடி கடந்த ஆண்டு 2022 – செப்டம்பர் மாதம் தொடங்கி வைத்தார்.

### INS Vikrant

- ஐ.என்.எஸ் விக்ராந்த் **கேரளாவில் உள்ள கொச்சின் ஷிப்யார்ட் லிமிடெட் (CSL)** மூலம் கட்டப்பட்டது.
- விக்ராந்த் என்ற பெயர் **இந்தியாவின் முதல் விமானம் தாங்கி கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்தை (1961)** கௌரவிக்க வைக்கப்பட்டது.
- விக்ராந்த் என்றால் **"தைரியம்"**.

### சமுத்திர சக்தி–23:

- இது **இந்தியா–இந்தோனேசியா** இருதரப்பு பயிற்சி.

### ஜல் ரஹத்:

- **அஸ்ஸாமில்** உள்ள **மனாஸ் நதியில்** உள்ள ஹக்ராமா பாலத்தில் இந்திய ராணுவம், சஷாஸ்திர சீமா பால், தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை (NDRF), மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் (DDMA) மற்றும் போலீஸ் பிரதிநிதிகள் இணைந்து நடத்திய வெள்ள நிவாரணப் பயிற்சி இது.

### சுதர்சன் சக்தி 2023:

- இது ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் மாநிலத்தின் மேற்கு எல்லைகளில் இந்திய ராணுவத்தின் சப்த சக்தி கட்டளையால் நடத்தப்பட்டது.

### அல் மொஹெட் அல் ஹிந்தி 23 கடல்சார் பயிற்சி:

- **இந்திய கடற்படை மற்றும் ராயல் சவுதி கடற்படை (RSNF)** இடையே இருதரப்பு பயிற்சி 'Al Mohed Al Hindi 23'.

## 1.4. உலக அமைப்புகள் – ஒப்பந்தங்கள் மற்றும் மாநாடுகள்

### G7 ஹிரோஷிமா உச்சி மாநாடு

- **2023 ஆம்** ஆண்டில், G7 அமைப்பின் தலைமைத்துவத்தினை ஏற்றுள்ள **ஜப்பான் ஹிரோஷிமா நகரில் G7 உச்சி மாநாட்டினை** நடத்த உள்ளது.
- இந்த ஆண்டிற்கான உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்கு என்று ஆஸ்திரேலியா, பிரேசில், கொமரோஸ், குக் தீவுகள், இந்தியா, இந்தோனேசியா, தென் கொரியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### உறுப்பு நாடுகள்

- **கனடா, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ஐக்கியப் பேரரசு மற்றும் அமெரிக்கா**

### G7 பற்றி

- G7 என்பது தொழில்மயமாக்கப்பட்ட **முன்னணி நாடுகளின்** முறைசாராக் குழுவாகும்.
- **1975 ஆம் ஆண்டில் ஆறு நாடுகள்** கொண்ட ஒரு குழுவாக இருந்த இந்த அமைப்பின் **முதலாவது உச்சி மாநாட்டினைப் பிரான்சு** நடத்தியது.

### சர்வதேச நோய்க்கிருமி கண்காணிப்பு இணையம் (IPSN)

- WHO ஆல் தொடங்கப்பட்ட **ஐபிஎஸ்என், கோவிட்–19** போன்ற தொற்று நோய்களின் அச்சுறுத்தலை விரைவாகக் கண்டறிந்து, அவற்றின் பரவலைத் தடுக்க தகவல்களைப் பகிர உதவும் உலகளாவிய அமைப்பாகும்.
- **ஐபிஎஸ்என் நாடுகள்** மற்றும் பிராந்தியங்களை இணைக்கும் தளத்தை வழங்கும் மற்றும் மாதிரிகளை சேகரித்து பகுப்பாய்வு செய்வதற்கான அமைப்புகளை மேம்படுத்துகிறது.
- வைரஸ்கள், பாக்டீரியாக்கள் மற்றும் பிற நோய்களை உண்டாக்கும் உயிரினங்களின் மரபணுக் குறியீட்டை பகுப்பாய்வு செய்ய IPSN நோய்க்கிருமி மரபியல் சார்ந்திருக்கும்.

### ஆறாவது இந்தியப் பெருங்கடல் மாநாடு (IOC)

- இந்த மாநாட்டை **வங்காளதேச வெளியுறவு அமைச்சகம்** மற்றும் **புது தில்லியை** தளமாகக் கொண்ட சிந்தனைக் குழுவான **இந்தியா** அறக்கட்டளை இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.
- **கருப்பொருள்:** அமைதி, செழிப்பு மற்றும் ஒரு நெகிழ்வான எதிர்காலத்திற்கான கூட்டாண்மை.
- **இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் (IOR) நாடுகள்** எவ்வாறு அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த முடியும் என்பதை விவாதிக்கும் ஒரு மன்றமாகும்.

### பின்னணி

- முதல் **ஐஓசி 2016 இல் (சிங்கப்பூர்)** நடைபெற்றது.
- காலப்போக்கில் பிராந்திய விவகாரங்களில் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கான முதன்மை ஆலோசனை மன்றமாக இது உருவெடுத்துள்ளது.
- பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் (SAGAR) பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான பிராந்திய ஒத்துழைப்பின் வாய்ப்புகளைப் பற்றி விவாதிக்க நாடுகளுக்கு இது ஒரு பொதுவான தளத்தை வழங்குகிறது.
- 2016 இல் SAGAR தொடங்கப்பட்டது.

### தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) அங்கீகாரம்

- **தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்கான உலகளாவிய கூட்டணி** (GANHRI) ஆனது, NHRC அங்கீகாரத்தை ஒத்திவைத்திருக்கிறது.
- தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக, **நியமனங்களில் அரசியல் தலையீடு, மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளில் காவல்துறையை ஈடுபடுத்துதல்,** சிவில் சமூகத்துடன் மோசமான ஒத்துழைப்பு போன்ற ஆட்சேபனைகளை மேற்கோள் காட்டி NHRC இன் அங்கீகாரத்தை GANHRI ஒத்திவைத்தது.

- அங்கீகாரம் இல்லாமல், **NHRC ஐ UN மனித உரிமைகள் கவுன்சிலில்** (UNHRC) **இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது.**
- ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் **பாரிஸ் கோட்பாடுகளுக்கு** இணங்கும் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களை (NHRI) மதிப்பாய்வு செய்து அங்கீகாரம் வழங்குவதற்கு GANHRI பொறுப்பு.
- **1993** ஆம் ஆண்டு U.N பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாரிஸ் கோட்பாடுகள், உலகெங்கிலும் உள்ள NHRIக்கான தரநிலைகளை மேம்படுத்த உதவுகிறது.

## 1.5. முக்கிய இடங்கள் பற்றிய செய்திகள்

### குமரியில் கண்ணாடிக் கூண்டுப் பாலம்

- **கன்னியாகுமரி கடலில், விவேகானந்தர் மண்டபம் – திருவள்ளுவர் சிலை** இடையே அமைக்கப்படவுள்ள கண்ணாடிக் கூண்டுப் பாலத் திட்டத்துக்கு **அமைச்சர் எ.வ.வேலு** அடிக்கல் நாட்டினார்.
- மேலும், கடலில் இரு பாறைகளில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம், 133 அடி உயர திருவள்ளுவர் சிலை ஆகியவற்றைப் பார்ப்பதற்காக **பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்** மூலம் 3 படகுகள் இயக்கப்படுகின்றன.

### புதிய நாடாளுமன்றத்தில் செங்கோல்

- ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியாவுக்கு அதிகாரப்பரிமாற்றம் நடந்ததை அடையாளப்படுத்தும் வகையில் **முதல் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேருவிடம் 1947–ஆம் ஆண்டு வழங்கப்பட்ட "செங்கோல்",** புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நிறுவப்படும் என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்தார்.
- இந்தச் செங்கோல் தற்போது பிரபாக்ராஜ் நேரு அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

### பின்னணி

- சோழ மன்னர்கள் அதிகார பரிமாற்றத்துக்கு புனித அடையாளமாக செங்கோல் பரிமாற்றம் செய்த பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்க ராஜாஜி ஆலோசனை கூறினார்.
- 1947 ஆகஸ்ட் 14–ஆம் நாள் நள்ளிரவில், மவுண்ட்பேட்டனிடம் இருந்து செங்கோலை. திருவாவடுதுறை இளைய தம்பிரான் முதலில் பெற்றார்.
- செங்கோலுக்குப் புனித நீர் தெளித்து ஓதுவா மூர்த்தி, வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் என்று தொடங்குகிற திருஞான சம்பந்தரின் கோளறு பதிகத்தை அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே என்று முழுமையாகப் பாடி ஆசிர்வதித்து செய்கோலை ஜவாஹர்லால் நேருவிடம் வழங்கினார்.

### அகழாய்வில் வாய்க்கால் அமைப்பு (கங்கைகொண்ட சோழபுரம்)

- **அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரம்** அருகேயுள்ள **மாளிகைமேடு** கிராமத்தில் 3–ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இதில் அண்மையில் **செங்கற்கல்லால் ஆன வாய்க்கால்** போன்ற அமைப்பு கண்டறியப்பட்டுள்ளது.
- இராஜேந்திர சோழன் 1019இல் கங்கை வரை படையெடுத்து சென்று வெற்றியும் கண்டார். அதனால் கங்கை கொண்ட சோழன் என்ற பட்டமும் பெற்றார்.
- அதன் நினைவாக 1023 இல் கங்கை கொண்ட சோழபுரம் எனும் புதிய தலைநகரை உருவாக்கினார்.
- இவ்வூர் 250 ஆண்டுகள் பிற்கால சோழ பேரரசின் தலைநகரமாக விளங்கியது.

## 1.6. விளையாட்டு

### ஆசிய சாம்பியன்ஷிப் பாட்மிண்டனில் தங்கம்

- இந்தியாவின் முன்னணி **ஆண்கள் இரட்டையர் ஜோடி சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி** மற்றும் **சிராக் ஷெட்டி** மலேசிய ஜோடியான ஓங் யூ சின் மற்றும் தியோ ஈ யியை வீழ்த்தி **தங்கம்** வென்றனர்.
- ஆசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டி **துபாயில்** நடந்தது.

### உலக தடகளத்தில் மதுரை வீரருக்கு தங்கம்

- **கிரீஸ் நாட்டில் நடைபெற்ற கான்டினென்டல் உலக தடகள போட்டியில் டிரிபிள் ஜம்ப்** பிரிவில், இந்தியா சார்பில் மதுரையைச் சேர்ந்த கல்லூரி மாணவர் **செல்வப்பிரபு திருமாறன்** (18), 16.78 மீ தூரம் தாண்டி **தங்கப் பதக்கம்** வென்றுள்ளார்.
- உலக சாம்பியன்ஷிப் போட்டியில், ஏற்கெனவே வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார் செல்வப்பிரபு.

## 1.7. விருதுகள் & கௌரவங்கள்

### வேர்ச்சொல் தலித் விருது

- கலை விமர்சகர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் மற்றும் **சாகித்ய அகாடமி விருது** பெற்றவர் **இந்திரன் (பி.ஜி.ராஜேந்திரன்) வேர்ச்சொல் தலித் இலக்கிய விருதைப்** பெற்றார்.
- நீலம் கலாச்சார மையத்தின் (NCC) ஒரு பகுதியாக இவ்விருது நிறுவப்பட்டது.

### படைப்புகள்

- அவரது மிக முக்கியமான படைப்பு, **"அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்"** (1982) (31 ஆப்பிரிக்க நாடுகளின் கட்டுரைகள், கதைகள் மற்றும் கவிதைகளின் புத்தகம்).
- அவரது அறிமுக இந்திய இலக்கியம் 1986 இல், **"காற்றுக்கு திசை இல்லை"** ஆகும்.

- **1994** இல், அவர் "**பசித்த தலைமுறை**" என்ற மூன்றாம் உலக நாடுகளின் கவிதைப் படைப்பை மொழிபெயர்த்து வெளியிட்டார்.

### ஆஸ்திரேலியாவின் உயரிய சிவிலியன் கவுரவம்

- **ஆஸ்திரேலியாவின் உயரிய சிவிலியன் கௌரவமான ஆர்டர் ஆஃப் ஆஸ்திரேலியா** டாடா சன்ஸ் நிறுவனத்தின் எமரிட்டஸ் தலைவர் **ரத்தன் டாடாவுக்கு** வழங்கப்பட்டது.
- இந்தியா–ஆஸ்திரேலியா இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துதலில் அவரது முயற்சிகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டது.

### 57வது ஞானபீட விருது

- **புகழ்பெற்ற கொங்கனி நாவலாசிரியரும்** சிறுகதை எழுத்தாளருமான **தாமோதர் மௌசோ 57 வது ஞானபீட விருதை** வென்றார்.
- ஆண்டுதோறும் வழங்கப்படும் ஞானபீட விருது மிகப் பழமையான மற்றும் மிக உயர்ந்த இந்தியா இலக்கிய விருது.
- இது **பாரதிய ஞானபீட இலக்கிய மற்றும் ஆராய்ச்சி அமைப்பால்** வழங்கப்படுகிறது.
- இது **புது தில்லியில்** உள்ளது.

### குறிப்பு:

- தாமோதர் மௌஸோவுக்கு **1983 இல் சாகித்ய அகாடமி விருது** வழங்கப்பட்டது.
- இந்த இலக்கிய விருதை வென்ற முதல் கொங்கனி எழுத்தாளர் ரவீந்திர கெலேகர் (2006–இல்) ஆவார்.
- அஸ்ஸாமி கவிஞர் நில்மணி பூகன் 56வது ஞானபீட விருதை வென்றார்.
- பூகன் ஞானபீடத்தைப் பெற்ற மூன்றாவது அஸ்ஸாமி எழுத்தாளர் ஆவார்.

## 1.8. சமீபத்திய வரலாற்று நிகழ்வுகள்

### திப்பு சுல்தானின் வாள்

- **மைசூர் மன்னர் திப்பு சுல்தானின்** போர் வாள் லண்டன் அருங்காட்சியகத்தில் ரூ.140 கோடிக்கு ஏலம் போனது.
- **மைசூரின் புலி** என அறியப்படும் மன்னர் திப்பு சுல்தான்.

| | |
|---|---|
| முதலாம் ஆங்கிலேய மைசூர் போர் | 1767 – 1769 |
| இரண்டாவது ஆங்கிலேய மைசூர் போர் | 1780 – 1784 |
| மூன்றாவது ஆங்கில மைசூர் போர் | 1789 – 92 |
| நான்காம் ஆங்கிலேய மைசூர் போர் | 1798 – 4 மே 1799 |

### எவரெஸ்ட் உச்சம் தொட்ட முதல் தமிழ் பெண்

- எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியைத் தொட்ட பெண்ணுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.
- **விருதுநகர் மாவட்டம்,** ஜோகில்பட்டியைச் சேர்ந்தவர் **முத்தமிழ்ச்செல்வி** சில வாரங்களுக்கு முன்பாக எவரெஸ்ட் சிகரத்தைத் தொடும் முயற்சியைத் தொடங்கினார்.
- தற்போது சிகரத்தின் உச்சியைத் தொட்டு சாதனை படைத்துள்ளார்.
- அவர் மே 23 அன்று உச்சியை அடைந்து மே 26 அன்று **காத்மாண்டு** திரும்பினார்.
- சிகரத்தை அடைந்து முகாமுக்குத் திரும்புவதற்கு அவருக்கு 56 நாட்கள் ஆனது.

**குறிப்பு:**

- **பச்சேந்திரி பால்–முதல் இந்திய பெண்** எவரெஸ்ட் சிகரத்தில் – 23 மே 1984.

## 1.9. நியமனங்கள்

### சென்னை உயர்நீதிமன்ற புதிய பொறுப்பு தலைமை நீதிபதி நியமனம்

- சென்னை உயர்நீதிமன்ற பொறுப்புத் தலைமை நீதிபதியாக இருந்த டி.ராஜா ஓய்வு பெற்றார்.
- இதையடுத்து, சென்னை உயர்நீதிமன்றத்தின் 2–ஆவது மூத்த நீதிபதியான **எஸ்.வைத்தியநாதனை பொறுப்புத் தலைமை நீதிபதியாக** நியமித்து குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உத்தரவிமட்டுள்ளார்.

**குறிப்பு:**

- மும்பை உயர்நீதி மன்ற பொறுப்புத் தலைமை நீதிபதியாக உள்ள கங்கா பூர்வாலாவை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்க உச்சநீதிமன்ற கொலிஜியம் பரிந்துரைத்தது.

### சிபிஐ இயக்குநராக பிரவீண் சூட் பதவியேற்பு

- **சிபிஐ இயக்குநராகப்** பொறப்பு வகித்து வந்த சுபோத்குமார் ஜெய்ஸ்வாலின் பதவிக்காலம் நிறைவடைவதையடுத்து, கர்நாடக டிஜிபி **பிரவீண் சூட்டை** அடுத்த இயக்குநராக நியமிக்க **பிரதமர் நரேந்திர மோடி, உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் அதீர் ரஞ்சன் சௌதரி** உள்ளிட்டோர் அடங்கிய **உயர்நிலைக் குழு** ஒப்புதல் அளித்தது.
- சிபிஐ இயக்குநரின் **பணிக்காலம் இரண்டு வருடங்கள்.**

**சிபிஐ பற்றி:**

- இது சட்டப்பூர்வ அமைப்பு அல்ல.

- இது **டெல்லி சிறப்பு போலீஸ் ஸ்தாபன சட்டம், 1946** இலிருந்து அதிகாரங்களைப் பெறுகிறது.
- மத்திய புலனாய்வுப் பணியகம் **1.4.1963** இல் இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் தீர்மானத்தின் மூலம் நிறுவப்பட்டது.

### உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக எஸ்.வி. கங்காபுர்வாலா பதவியேற்பு

- **சென்னை உயர்நீதிமன்றத்தின்** புதிய **தலைமை நீதிபதியாக** உச்ச நீதிமன்ற கொலீஜியம் பரிந்துரை செய்த நீதிபதி **எஸ்.வி. கங்காபுர்வாலாவை** நியமித்து குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உத்தரவிட்டார்.
- சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக எஸ்.வி.கங்காபுர்வாலா 2023 மே 28ல் பதவியேற்றார்.
- அவருக்கு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

### மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக பிரவீண் குமார் ஸ்ரீவாஸ்தவா பதவியேற்பு

- மே 29, 2023 மத்திய **ஊழல் கண்காணிப்பு ஆணையராக பிரவீண்குமார் ஸ்ரீவாஸ்தவா** பதவியேற்றார்.
- தில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில், **குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு முன்னிலையில் ஸ்ரீவாஸ்தவா** பதவியேற்றார்.

### CVC–பற்றிய குறிப்பு

- உருவாக்கப்பட்டது – **பிப்ரவரி 11, 1964.**
- பரிந்துரை குழு – **ஊழல் தடுப்பு குழு (தலைவர் கே. சந்தானம்).**
- மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தில் சிவிசி, இரண்டு ஊழல் கண்காணிப்பு ஆணையர்கள் இருக்க வேண்டும்.
- சிவிசி மற்றும் ஊழல் கண்காணிப்பு ஆணையர்கள் **4 ஆண்டுகள் அல்லது 65 வயதை** எட்டும் வரை அப்பதவிகளை வகிக்கலாம்.

## 2. அரசியல்

### 2.1. அரசு நலத்திட்டங்கள்

### உடான் 5.1

- சமீபத்தில் **பயணியர் விமானப் போக்குவரத்து அமைச்சகமானது உடான்** 5.1 என்ற திட்டத்தினை அறிமுகப் படுத்தியது.
- இது **ஹெலிகாப்டர் வழித்தடங்களுக்காக** வடிவமைக்கப்பட்ட **பிராந்திய இணைப்புத் திட்டத்தின்** (RCS) புதிய பதிப்பாகும்.

- இந்தத் திட்டம் விமானப் பயணத்தை வெகுஜனப்படுத்துவது, சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் உள்ளூர்ப் பொருளாதாரங்களை மேம்படுத்தச் செய்வது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஹெலிகாப்டர் பயணத்தை மலிவு விலையாக மாற்ற விமானக் கட்டண வரம்புகளை 25% வரை இது குறைக்கிறது.

## SUPREME திட்டம்

- **அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது, உபகரணங்களின் மேம்பாடு, தடுப்பு முறையிலான (முன்கூட்டிய) பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பிற்கான (SUPREME) ஆதரவு** என்ற முன்னெடுப்பினைச் சமீபத்தில் தொடங்கியது.
- இது அந்த அமைச்சகத்தின் ஆதரவின் கீழ் உருவாக்கப்பட்டப் **பகுப்பாய்வுக் கருவி மையங்களை (AIFs)** மேம்படுத்தச் செய்தல் மற்றும் பராமரிப்பதற்கான நிதி உதவி போன்றவற்றை வழங்க முயல்கிறது.
- இது பழுதுபார்த்தல், மேம்படுத்துதல், பராமரித்தல், மறுசீரமைப்பு செய்தல் அல்லது கூடுதல் இணைப்புகளைப் பெறுதல் ஆகியவற்றிக்கு நிதி உதவியை விரிவு படுத்தச் செய்வதற்கான ஒரு முதல்–வகையான திட்டமாகும்.
- இதில் அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு நிதி உதவி வழங்கப்படும்.
- அனைத்துத் தனியார் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களும் இத்திட்டத்தில் **நிதியளிப்பதற்கான முறைமை 75:25** என்ற வீதத்தில் இருக்கும்.

## ஸ்டார்ட் திட்டம்

- **விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விழிப்புணர்வுப் பயிற்சி (START)** என்ற ஒரு புதிய அறிமுக–நிலை இணைய வழிப் பயிற்சித் திட்டத்தை இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) அறிவித்துள்ளது.
- இயற்பியல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் முதுகலை மற்றும் இறுதி ஆண்டு இளங்கலை பயிலும் மாணவர்களை இலக்காக START கொண்டு உள்ளது.
- இந்தத் திட்டம் மாணவர்களுக்கு விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஒரு அறிமுகநிலைப் பயிற்சியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தொற்றாத நோய்களுக்கான தேசியத் திட்டம்

- **சுகாதாரத் துறை அமைச்சகமானது புற்றுநோய், நீரிழிவு நோய், இருதய நோய்கள் மற்றும் பக்கவாதம் (NPCDCS)** ஆகியவற்றின் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான ஒரு தேசியத் திட்டத்தில் புதிய நோய்களைச் சேர்த்துள்ளது.
- பல புதிய நோய்கள் அல்லது நோய்க் குழுக்களின் சேர்க்கை மற்றும் புதிய சுகாதார முயற்சிகள் ஆனது, NPCDCS திட்டத்தினை விரிவுபடுத்துவதற்கு மத்திய அரசினைத் தூண்டியுள்ளது.

- எனவே இந்த 'NPCDCS' திட்டத்தினை, '**தொற்றாத நோய்களுக்கான தடுப்பு மற்றும் அதன் கட்டுப்பாட்டுக்கான தேசியத் திட்டம்**' **(NP–NCD)** என மறுபெயரிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- NPCDCS திட்டமானது, தேசிய சுகாதாரத் திட்டத்தின் (NHM) கீழ் நாடு முழுவதும் செயல் படுத்தப் படுகிறது.

### குறிப்பு:

- இந்தியாவில் 1990 ஆம் ஆண்டில் 37.9% ஆக இருந்த தொற்றாத நோய்களால் ஏற்படும் இறப்பு விகிதம் ஆனது 2016 ஆம் ஆண்டில் 61.8% ஆக அதிகரித்துள்ளது.

### முக்கிய தொற்றாத நோய்கள்

- இருதய நோய்கள் (CVDs), புற்றுநோய்கள், நாள்பட்ட சுவாச நோய்கள் (CRDS) மற்றும் நீரிழிவு நோய்.

## அரிசி செறிவூட்டல் (Rice Fortification)

- **ஐக்கிய நாடுகள் சபையின்** அறிக்கையின்படி, இந்தியாவின் முன்னோடித் திட்டமான **நெல் செறிவூட்டல், பள்ளிக் குழந்தைகளிடையே இரத்த சோகையின் தாக்கத்தை** கணிசமாகக் குறைத்துள்ளது.
- முன்னோடித் திட்டத்தின் வெற்றி மற்றும் சாத்தியக்கூறுகளைக் கண்ட பிறகு, 2021 ஆம் ஆண்டில், உணவு அடிப்படையிலான சமூக உதவித் திட்டங்கள் மூலம் விநியோகிக்கப்படும் அனைத்து அரிசிகளும் 2024 ஆம் ஆண்டிற்குள் பலப்படுத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது.
- செறிவூட்டல் என்பது உணவு விநியோகத்தின் ஊட்டச்சத்து தரத்தை மேம்படுத்த உணவு அல்லது காண்டிமென்ட்களில் (துணை உணவு) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட **நுண்ணூட்டச்சத்துக்களின் (அதாவது வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்)** உள்ளடக்கத்தை வேண்டுமென்றே அதிகரிப்பதாகும்.
- **உணவுப் பாதுகாப்புத் தரநிலைகள் (உணவுகளை வலுப்படுத்துதல்) ஒழுங்குமுறை, 2018** இன் கீழ் உணவு செறிவூட்டல் கட்டுப்படுத்தப்படுகிறது.
- அரிசி செறிவூட்டலின் கீழ், ஊட்டச்சத்து ஊக்கத்திற்காக **இரும்பு, வைட்டமின் பி12 மற்றும் ஃபோலிக் அமிலம்** போன்ற நுண்ணூட்டச்சத்துக்கள் சேர்க்கப்படுகின்றன.

### அரிசி செறிவூட்டலின் நன்மைகள்

- ஊட்டச் சத்து குறைபாடு மற்றும் இரத்த சோகையை செலவு குறைந்த முறையில் எதிர்த்துப் போராடுவது, உற்பத்தித் திறன் இழப்பு, நோய் மற்றும் இறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவுக்கு ஆண்டுதோறும் குறைந்தது 77,000 கோடி செலவாகும்.
- **கிரெட்டினிசம், கோயிட்டர், தைரோடாக்சிகோசிஸ், மூளை பாதிப்புகளைத்** தடுக்கிறது.

- மேலும், கருவில் மற்றும் பிறந்த குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

### ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு (OSOP) திட்டம்

- **ரயில்வே அமைச்சகம், 'உள்ளூர்களுக்கான குரல்'** பார்வையை மேம்படுத்துவதற்கும், விளிம்புநிலைப் பிரிவினருக்கு கூடுதல் வருமான வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இந்திய ரயில்வேயில் OSOP திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், ரயில் நிலையங்களில் உள்ள **OSOP விற்பனை நிலையங்கள்,** உள்நாட்டு/உள்ளூர் தயாரிப்புகளை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும், அதிகத் தெரிவுநிலையை வழங்கவும் ஒதுக்கப்பட்டுள்ளன.
- இந்த OSOP ஸ்டால்கள் தேசிய வடிவமைப்பு நிறுவனத்தால் சீரான தன்மைக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.
- OSOP என்பது அந்த இடத்திற்கு குறிப்பிட்டது மற்றும் பழங்குடியினரால் செய்யப்பட்ட கலைப்பொருட்கள், உள்ளூர் நெசவாளர்களால் செய்யப்பட்ட கைத்தறி போன்றவை அடங்கும்.

### விவாத் சே விஸ்வாஸ் I திட்டம்

- கோவிட்–19 காலத்திற்கு **சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (எம்எஸ்எம்இ)** நிவாரணம் வழங்குவதற்காக **நிதி அமைச்சகம் விவாட் சே விஸ்வாஸ் திட்டத்தை** அறிமுகப்படுத்தியுள்ளது.
- இத்திட்டம் 2023–24 யூனியன் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.
- இது **நிதி அமைச்சகத்தின்** செலவினத் துறையால் தொடங்கப்பட்டது.
- இதன் கீழ், அமைச்சகங்கள் செயல்திறன் பாதுகாப்பு, ஏலப் பாதுகாப்பு மற்றும் கோவிட்–19 தொற்றுநோய்களின் போது பறிமுதல் செய்யப்பட்ட/கழிக்கப்பட்ட சேதங்களைத் திரும்பப் பெறுதல் அடங்கும்.

### போஷன் பி, பதாய் பி (PBPB) திட்டம்

- மத்திய **பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்** (WCD), PBPB திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- PBPB நாடு முழுவதும் உள்ள அங்கன்வாடிகளில் ஆரம்பகால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்வியில் (ECCE) (குழந்தைகளின் முதல் ஆறு ஆண்டுகள்) கவனம் செலுத்தும்.

#### திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

- இது தேசிய பொது ஒத்துழைப்பு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு நிறுவனம் (NIPCCD) மூலம் அங்கன்வாடி பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும்.

- உடல் மற்றும் ஆற்றல் மேம்பாடு, அறிவாற்றல் வளர்ச்சி போன்ற தேசிய பாடத்திட்ட கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு களத்திலும் குழந்தைகளின் வளர்ச்சியை இது குறிவைக்கிறது.
- இது முழுமையான மற்றும் தரமான ஆரம்பகால தூண்டுதல் மற்றும் குழந்தைகளுக்கான முன் ஆரம்பக் கல்வியை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தும்.
- ECCE என்பது அனைத்து இளம் குழந்தைகளுக்கும் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து மற்றும் ஆரம்பகால கற்றல் வாய்ப்புகள் உள்ளிட்ட கவனிப்பை வழங்குவதைக் குறிக்கிறது.
- குழந்தைகளின் உடல்–இயக்கம், அறிவாற்றல், சமூக–உணர்ச்சி மற்றும் மொழி வளர்ச்சிக்கு விளையாட்டு அடிப்படையிலான மற்றும் வளர்ச்சிக்கு பொருத்தமான செயல்பாடுகளைக் கொண்ட ஒரு பாதுகாப்பு மற்றும் தூண்டுதல் சூழல் இன்றியமையாதது.
- EECE என்பது மிஷன் சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0 (மிஷன் போஷன் 2.0) ஆகியவற்றின் முக்கிய அங்கமாகும்.

### இந்தியாவில் அங்கன்வாடி மையங்கள்:

- அவை **ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் (1975)** கீழ் நிறுவப்பட்டுள்ளன.
- நாடு முழுவதும் செயல்படும் 1.39 மில்லியன் அங்கன்வாடி மையங்கள் 6 வயதுக்குட்பட்ட சுமார் 80 மில்லியன் குழந்தைகளுக்கு துணை ஊட்டச்சத்து மற்றும் ஆரம்ப பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்குகின்றன.

### பூஜ்ய கழிவுகளுக்கான ஒற்றை நிறுத்த மையங்கள்(One stop centre)

- பயன்படுத்தப்படாத அல்லது பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருட்கள், உடைகள், காலணிகள், காலணிகள், புத்தகங்கள் மற்றும் பொம்மைகளை டெபாசிட் செய்ய குடிமக்கள், வணிக நிறுவனங்கள் போன்றவற்றுக்கு ஒரே இடத்தில் தீர்வாக பயன்பாட்டை குறைத்தல், மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு என அழைக்கப்படும் **ஒற்றை நிறுத்த மையங்களை** அரசாங்கம் தொடங்கும்.
- பின்னர் பொருட்கள் வெவ்வேறு பங்குதாரர்களுக்கு மறுபயன்பாட்டிற்காக புதுப்பிக்கப்படும் அல்லது வட்ட பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் புதிய தயாரிப்புகளாக மாற்றப்படும்.
- இந்த 'ஆர்ஆர்ஆர்' மையங்கள் **தூய்மை பாரத இயக்கம் – நகர்புறம் 2.0** (எஸ்பிஎம்–யு 2.0) இன் கீழ், நாடு தழுவிய பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக **'மேரி லைஃப், மேரா ஸ்வச் ஷெஹர்' ('மை லைஃப், மை கிளீன் சிட்டி')** அமைக்கப்படும்.

# 3. புவியியல்

## 3.1. சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல்

### சிவிங்கி புலிகள்

- **ம.பி. குனோ பூங்காவில்** 2 சிவிங்கிப் புலி குட்டிகள் இறப்பு.
- இந்தியாவில் அழிந்துபோன இனமான **சிவிங்கிப்புலிகளை மீண்டும் அறிமுகப்படுத்தும் திட்டத்தின்கீழ் தென்னாப்பிரிக்கா மற்றும் நமீபியா** ஆகிய நாடுகளில் இருந்து 2 கட்டங்களாக 20 சிவிங்கிப் புலிகள் கொண்டுவரப்பட்டன.
- மத்திய பிரதேசத்தில் உள்ள குனோ தேசிய பூங்காவில் அவை பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், 2 பெண் சிவிங்கிப் புலிகளும் ஒரு ஆண் சிவிங்கிப் புலியும் அடுத்தடுத்து உயிரிழந்தன.

### சிவிங்கி புலிகள் அறிமுக திட்டம்

- ஆப்பிரிக்காவில் உள்ள நமீபியா நாடும் இந்தியாவும் சிறுத்தைகளை இந்தியாவிற்கு அழைத்து வருவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெடுத்திட்டுள்ளன.
- நிலப்பரப்பில் அதி வேகம் ஓடக் கூடிய திறன் பெற்ற சிறுத்தைகள் ஏற்கனவே இந்தியாவில் இருந்துள்ளது. வேட்டையாடப்பட்டது உள்ளிட்ட காரணங்களால் இந்தியாவில் சிறுத்தை இனத்தின் எண்ணிக்கை குறைந்தபோனது.
- தென் ஆப்பிரிக்காவில் வாழும் சிறுத்தைகளை இந்தியாவிற்கு கொண்டு வருவதற்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளித்தது.
- அதோடு மட்டுமல்லாமல், சிறுத்தை திட்டத்தை செயல்படுத்த **தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்துக்கு** (National Tiger Conservation Authority (NTCA) வழிகாட்டும் நோக்கில் 3 பேர் கொண்ட குழுவையும் உச்சநீதிமன்றம் அமைத்தது.

### மறு அறிமுகம்

- "மறு அறிமுகம்" என்பது, ஒரு இனத்தின் அது உயிர் பிழைக்க திறன் கொண்ட பகுதியில் அதை விடுவிப்பதாகும்.
- **புராஜெக்ட் டைகர்,** காடுகளுக்கும் அவற்றைப் பாதுகாப்புக்கும் உதவியது போல சிறுத்தையின் பாதுகாப்பு புல்வெளிகள் மற்றும் வாழ்விடங்களை புதுப்பிக்கும். மேலும், சிறுத்தையின் எண்ணிக்கை உயரும்.

## 4. பொருளாதாரம்

### 4.1. தற்போதைய சமூக பொருளாதார சிக்கல்

#### வரி சாரா வருவாய் அதிகரிப்பு

- 2023–24 ஆம் ஆண்டில் **தமிழ்நாடு அரசின் வரி சாரா வருவாயில் 32% அதிகரிப்பு** பதிவாகி உள்ளது.
- இது நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகபட்சமாகும்.
- முன்னதாக, 2018–19 ஆம் ஆண்டில் தமிழக அரசின் வரி சாராத வருவாயில் 30% அளவு அதிகரிப்பானது பதிவானது.

#### மாநிலத்தின் வருவாய் ஆதாரங்கள்:

- **வரி வருவாய்** (சொந்த வரி வருவாய் மற்றும் மத்திய அரசு வரிகள்/கட்டணங்களில் உள்ள மாநில அரசின் பங்கு); **வரி சாராத வருவாய்;** மற்றும் இந்திய அரசின் **மானியங்கள்**.

#### வரி சாராத வருவாய்:

- வட்டி வருவாய்; ஈவுத் தொகை மற்றும் இலாபம்; சுரங்கம் மற்றும் பிற துறை சார்ந்த வருவாய்கள்.

### 4.2. புதிய பொருளாதார கொள்கைகள்

#### மின் மேல்முறையீட்டுத்(e–Appeal) திட்டம்

- **மத்திய நேரடி வரிகள் வாரியம்** (CBDT) வருமான வரி ஆணையர்களின் மட்டத்தில் மேல்முறையீடுகள் நிலுவையில் இருப்பதைக் குறைக்க மின்–முறையீட்டுத் திட்டம், 2023ஐ அறிவித்துள்ளது.

#### திட்டம் பற்றி:

- பாதிக்கப்பட்ட மதிப்பீட்டாளர், இணை ஆணையர் (மேல்முறையீடுகள்) பதவிக்குக் கீழே உள்ள மதிப்பீட்டு அதிகாரியால் நிறைவேற்றப்பட்ட சில உத்தரவுகளை இணை ஆணையர் (மேல்முறையீடுகள்) முன் மேல்முறையீடு செய்யலாம்.
- இத்திட்டத்தின் கீழ் நடைபெறும் எந்தவொரு நடவடிக்கையிலும் தனிப்பட்ட முறையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி மூலமாக ஒருவர் ஆஜராக வேண்டியதில்லை.
- எவ்வாறாயினும், மேல்முறையீடு செய்பவர் தனிப்பட்ட விசாரணையைக் கோரலாம், இது வீடியோ கான்பரன்சிங் அல்லது வீடியோ தொலைபேசி மூலம் செய்யப்படும்.

## 4.3. குறியீடுகள்

### இந்தியாவில் இணையம் அறிக்கை 2022

- இந்த அறிக்கையின்படி, **இந்திய மக்கள்தொகையில் 52%** அல்லது 759 மில்லியன் மக்கள் 2022 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது இணைய வசதியினை அணுகுகிறார்கள்.
- அவர்களில், 399 மில்லியன் பேர் கிராமப்புறங்களையும், 360 மில்லியன் பேர் நகர்ப் புறங்களையும் சேர்ந்தவர்கள் ஆவர்.
- 2022 ஆம் ஆண்டில் தோராயமாக 71% இணைய வசதி ஊடுருவலானது 6% வளர்ச்சியைக் கண்டது.
- பீகார்(32%) மாநிலமானது, முன்னணி மாநிலமான கோவாவை(70%) விட இணைய வசதி ஊடுருவலின் அளவில் பாதி அளவினைக் கொண்டுள்ளது.
- செயலில் உள்ள இணையப் பயனர்களில் **54% ஆண் பயனர்களாக** உள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டில் பதிவான அனைத்துப் புதியப் பயனர்களில் **57% பெண்கள்** ஆவர்.
- 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட எண்ணிமப் பண வழங்கீடானது, 2021 ஆம் ஆண்டினை விட 13% அதிகரித்து 338 மில்லியன் பயனர்களை எட்டியது.

#### குறிப்பு:

- 2025 ஆம் ஆண்டிற்குள், பதிவு செய்யப்பட உள்ள புதியப் பயனர்களில் 65% பேர் பெண்களாக இருப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### வேலைகளின் எதிர்கால அறிக்கை 2023

- **உலகப் பொருளாதார மன்றம் (WEF) வேலை வாய்ப்பு அறிக்கை 2023 நான்காவது பதிப்பை** (2016 இல் முதல் பதிப்பு) வெளியிட்டது.
- இந்த இரு வருடத் தொடரின் அடுத்த ஐந்து ஆண்டுகளில் (2023–2027) வேலைகள் மற்றும் திறன்கள் எவ்வாறு உருவாகும் என்பதை ஆராய்கிறது.
- இது **நான்காவது தொழில்துறை புரட்சியின்** தொழிலாளர்–சந்தை தாக்கம், பசுமை மற்றும் ஆற்றல் மாற்றங்கள், விநியோகச் சங்கிலி மாற்றங்கள் போன்றவற்றைக் கண்காணிக்கிறது.

#### முக்கிய கூறுகள்

- வணிக மாற்றத்தின் முக்கிய இயக்கிகள் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது, அதைத் தொடர்ந்து வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, மெதுவான பொருளாதார வளர்ச்சி மற்றும் பசுமை மாற்றம் ஆகியவை அடங்கும்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் 44% தொழிலாளர்களின் திறன்கள் சீர்குலைந்துவிடும்.

- 61% இந்திய நிறுவனங்கள் ESG தரநிலைகளின் பரந்த பயன்பாடுகள் வேலை வளர்ச்சியை அதிகரிக்கும் என்று கருதுகின்றன.
- அதைத் தொடர்ந்து புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதோடு டிஜிட்டல் அணுகலை விரிவுபடுத்துகிறது.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் 23% வேலைகள் மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- வலுவான நிகர வேலை–உருவாக்கம் விளைவு, பசுமை மாற்றம், ESG தரநிலைகளின் பரந்த பயன்பாடு மற்றும் விநியோகச் சங்கிலிகளின் உள்ளூர்மயமாக்கல் ஆகியவற்றால் இயக்கப்படுகிறது.

### பிளாஸ்டிக் மாசுபாடு குறித்த UNEP அறிக்கை

- பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவர முழுமையான பாதையில் செல்லுங்கள் என்று **ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP)** அறிக்கை கூறியுள்ளது.
- 'Turning of the Tap' என்ற தலைப்பிலான அறிக்கை, 'பிளாஸ்டிக் மாசுபாட்டை உலகம் எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வரலாம் மற்றும் ஒரு வட்டப் பொருளாதாரத்தை உருவாக்கலாம்' என்ற தலைப்பில், சுற்று பிளாஸ்டிக் பொருளாதாரத்திற்கான தீர்வுடன் தொடர்புடைய பல்வேறு வாழ்வாதாரங்களையும் பாதுகாக்கிறது.
- சுற்றறிக்கை பொருளாதாரம் என்பது ஒரு பொருளாதார அமைப்பாகும்
- அங்கு உற்பத்தி வழிமுறைகள் ஒரு நிலையான மற்றும் சுற்றுச்சூழல் நட்பு உற்பத்தி முறையை எளிதாக்குவதற்கு உள்ளீடுகளை மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி செய்வதை சுற்றி ஒழுங்கமைக்கப்படுகின்றன.

### முக்கிய அம்சங்கள்

- **2040** ஆம் ஆண்டளவில் சந்தை ஒரு வட்டப் பொருளாதாரத்திற்கு மாறினால் உலகளாவிய **பிளாஸ்டிக் மாசுபாடு 80 சதவிகிதம் குறையும்.**
- தற்போது, உலகம் ஒவ்வொரு ஆண்டும் 430 மில்லியன் மெட்ரிக் டன் பிளாஸ்டிக்கை உற்பத்தி செய்கிறது.
- அதில் மூன்றில் இரண்டு பங்கு குறுகிய கால பயன்பாட்டுக்கான தயாரிப்புகளாகும்.
- 2040 ஆம் ஆண்டில் 1.5 டிகிரி செல்சியஸ் சூழ்நிலையில் அனுமதிக்கப்படும் உலகளாவிய பசுமை இல்ல வாயு உமிழ்வுகளில் 19% பிளாஸ்டிக் வெளியிடக்கூடும்.
- ஒரு பகுதியில் பிளாஸ்டிக் குவிந்து பிளாஸ்டிக் மாசு உருவாக்கும் போது, இயற்கைச் சூழலை எதிர்மறையாக பாதிக்கத் தொடங்கும் போது, தாவரங்கள், வனவிலங்குகள் மற்றும் மனித மக்களுக்கும் கூட பிரச்சனைகளை ஏற்படுகிறது.

### மாற்றப்பட்ட பிளாஸ்டிக் பொருளாதாரத்தின் நன்மைகள்:

- வேலைகள், வருமானம் மற்றும் புதுமைக்கான வாய்ப்புகள்;

- மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதத்தை குறைத்தல்;
- மற்றும் பொறுப்புகள், அபாயங்கள் குறைப்பு.

## 5. அறிவியல்

### 5.1. அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள்

#### கிளியோபிளாஸ்டோமா மல்டிஃபார்ம் டிரைவர்கள் (இயந்திர கற்றல் அடிப்படையிலான கணக்கீட்டு கருவி)

- மூளை மற்றும் முதுகுதண்டு வடத்தில் வீரியம் மிக்க கட்டிகளைக் கண்டறிய இயந்திர கற்றல் (Machine learning) அடிப்படையிலான கணக்கீட்டு கருவி **இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை** (IIT–M) உருவாக்கியுள்ளது.
- Glioblastoma Multiform Drivers (GBM Driver) என்று அழைக்கப்படும் இக்கருவி ஆன்லைனிலும் கிடைக்கிறது.
- **க்ளியோபிளாஸ்டோமா** என்பது மட்டுப்படுத்தப்பட்ட வேகமாக மற்றும் தீவிரமாக வளரும் கட்டியாகும்.

#### உலகின் முதல் நுண்திரவ DAP உரம்

- மத்திய உள்துறை அமைச்சர், டெல்லியில் **"உலகின் முதல் நுண்திரவ DAP (டை–அமோனியா பாஸ்பேட்) உரத்தினை"** அறிமுகம் செய்தார்.
- இது **இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு லிமிடெட் (IFFCO)** நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டது.
- விவசாயிகளுக்கு ஆகும் உற்பத்திச் செலவைக் குறைக்கவும், இரசாயன உரங்களைத் தவிர்க்கவும் உதவும் என்பதால் இது ஒரு புரட்சிகரப் பொருளாகப் புகழப்படுகிறது.
- ஒரு **500 மில்லி அளவு** கொண்ட கொள்கலனில் உள்ள **திரவ DAP உரத்தில் 8% நைட்ரஜன்** மற்றும் **16% பாஸ்பரஸ்** உள்ளது.
- இது வழக்கமாகப் பயன்படுத்தப்படுகின்ற **50 கிலோ எடை கொண்ட DAP உர மூட்டைக்கு ஈடானதாக** அமையும்.
- இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு லிமிடெட் நிறுவனமானது அதன் நுண் யூரியா மற்றும் நுண் DAP மீது காப்புரிமையினைப் பெற்றுள்ளது.
- இந்தக் கூட்டுறவு நிறுவனமானது அடுத்த 20 ஆண்டுகளுக்கு வேண்டி இந்தத் தயாரிப்புக்களுக்கான பங்கு வீத உரிமையினைக் கொண்டிருக்கும்.

### 5.2. விண்வெளி

#### வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது ஜிஎஸ்எல்வி எஃப்–12

- **போக்குவரத்து வழிகாட்டுதலுக்கான என்விஎஸ்–01** செயற்கைக்கோளுடன் **ஜிஎஸ்எல்வி எஃப்–12** ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

- **ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில்** உள்ள **சதீஷ் தவண் ஆராய்ச்சி மையத்தின் ஏவுதளத்தில்** இருந்து செலுத்தப்பட்ட அந்த ராக்கெட், திட்டமிட்டபடி இலக்கை அடைந்ததைத் தொடர்ந்து, திட்டம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.
- தரைவழி, கடல்வழி மற்றும் வான்வழிப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு பயன்பாட்டுக்கா **"இந்திய மண்டல வழிகாட்டுதல் செயற்கைக்கோள் அமைப்பு"** என்ற கட்டமைப்பை **(ஐஆர்என்எஸ்எஸ்)**
- இந்தியாவுக்கான பிரத்யேக வழிகாட்டு அமைப்பான **"நேவிக்"** (வழிகாட்டு) தொழில்நுட்பத்தை செயல்படுத்தும் வகையில் என்.வி.எஸ்.–01 ஏவப்பட்டுள்ளது.
- எல்–1, எல் 5, எஸ். போன்ற அதிக அலைவரிசை பேண்ட்களை பயன்படுத்தும் 5–ஆவது நாடு என்ற சிறப்பை இந்தியா பெறுகிறது.
- முதல் முறையாக உள்நாட்டில் தயாரிக்கபட்ட அணுக் கடிகாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பு:

- **இஸ்ரோ** ஆகஸ்ட் 15, **1969** இல் **டாக்டர் விக்ரம் சாராபாய் (இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை)** அவர்களால் உருவாக்கப்பட்டது.

### ஷென்ஷு–16 விண்கலத்தில் 3 பேருடன் விண்ணில் பாய்ந்த மார்ச்–2 எஃப் ராக்கெட்

- ***சீனா*** சொந்தமாக உருவாக்கியுள்ள **தியாங்காங் விண்வெளி நிலையத்துக்கு** 3 **விண்வெளி வீரர்களை** தனது **ஷென்ஷு – 16 விண்கலம்** மூலம் அனுப்பியது.

குறிப்பு:

- கடந்த 2003–ஆம் ஆண்டில் ஷென்ஷு–5 விண்கலம் மூலம் விண்வெளி வீரர் ஒரு வரை சீனா முதல் முறையாக விண்வெளிக்கு அனப்பியது.
- **ரஷியா, அமெரிக்காவுக்குப்** பிறகு சொந்த முயற்சியில் **விண்வெளிக்கு மனிதரை அனுப்பிய 3–வது நாடு சீனா.**

## 6. தினசரி தேசிய நிகழ்வு

### நிகழ்வுகளின் தேசிய நாட்குறிப்பு

### பிரதமரின் மன் கி பாத்தின் 100வது பதிப்பு

- அகில இந்திய வானொலியில் **பிரதமர் நரேந்திர மோடியின்** பிரபலமான வானொலி நிகழ்ச்சியான **"மன் கி பாத்" 100வது அத்தியாயம்** ஒலிபரப்பானது.
- புது தில்லியில் உள்ள கேலரி ஆஃப் மாடர்ன் ஆர்ட் (NGMA) **மன் கி பாத் 100வது அத்தியாயத்தை** நினைவுகூரும் வகையில் **"ஜன சக்தி"** என்ற **தலைப்பில் கண்காட்சி** நடைபெற்றது.

- இது நீர் பாதுகாப்பு, நாரி சக்தி, கோவிட் மற்றும் இந்தியா பற்றிய விழிப்புணர்வு; உலகம், ஸ்வச் பாரத், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம், இந்திய விவசாயம், யோகா மற்றும் ஆயுர்வேதம, இந்திய அறிவியல் மற்றும் விண்வெளி, விளையாட்டு மற்றும் உடற்தகுதி, இந்தியா @ 75 மற்றும் அம்ரித் கால், மற்றும் வடகிழக்கு இந்தியாவைக் கொண்டாடுகிறோம் போன்ற பல்வேறு கருப்பொருள்களை உள்ளடக்கிய நிகழ்ச்சியாகும்.

### மன் கி பாத் பற்றி:

- இது **அகில இந்திய வானொலியில்** ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சியாகும்,
- இதன் மூலம் பிரதமர், இந்திய குடிமக்களிடம் உரையாற்றுகிறார்.
- திட்டம் **3 அக்டோபர் 2014** அன்று தொடங்கப்பட்டது.

### லூதியானாவில் எரிவாயு கசிவு

- **லூதியானாவின் கியாஸ்புரா** பகுதியில் ஒரு கழிவுநீர் தொட்டியில் இருந்து வெளியான நச்சு வாயுவை சுவாசித்ததில் மூன்று குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.
- **பஞ்சாபின்** தொழில்முறை மையமான மக்கள் தொகை அதிகம் உள்ள லூதியானாவின் கியாஸ்புரா பகுதியில் இச்சோகம் ஏற்பட்டது.
- நகரின் அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட கியாஸ்புரா பகுதியில் காற்றில் அதிக அளவு **ஹைட்ரஜன் சல்பைடு** கண்டறியப்பட்டது.

### ஹைட்ரஜன் சல்பைடு (H2S):

- இது மிகவும் **நச்சுத்தன்மை** வாய்ந்த, நிறமற்ற மற்றும் **எரியக்கூடிய வாயுவாகும்.**
- அழுகிய முட்டைகளின் கடுமையான வாசனை கொண்டது.
- இது **காற்றை விட கனமானது,** மேலும் மோசமாக காற்றோட்டம் உள்ள இடங்களின் அடிப்பகுதியில் குவிந்துவிடும்.
- இது பூமியில் கந்தகத்தின் உயிர்வேதியியல் சுழற்சியில் மையப் பங்கேற்பாளர் ஆகும்.
- இது இயற்கையாக கச்சா பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் வெந்நீர் ஊற்றுகளில் கிடைக்கிறது.

### ஹைட்ரஜன் சல்பைட் வெளிப்பாடு விளைவுகள்.

- கண்கள் மற்றும் சுவாச அமைப்புகளில் எரிச்சல்
- மூச்சுத்திணறல், கோமா, தலைச்சுற்றல், தலைவலி, தூக்கமின்மை.

### நிதி ஆயோக் நிர்வாக குழு கூட்டம்.

- தில்லியில் நடைபெற்ற **நீதி ஆயோக் (கொள்கை வகுக்கும் குழு)** அமைப்பின் நிர்வாகக் குழு கூட்டத்தில் பிரதமர் மோடி.
- **"வளர்ந்த பாரதம் 2047: இந்தியர்களின் பங்களிப்பு"** என்ற கருத்துருவில் நீதி ஆயோக்கின் 8–வது நிர்வாகக் குழு கூட்டம், 2023 மே 23 நடைபெற்றது.

- நிதி ஆயோக் என்பது நாட்டின் மிக உயரிய கொள்கை உத்திகளை வகுக்கும் அமைப்பாகும். பிரதமர் தலைமையிலான இதன் நிர்வாகக் குழுவின் அனைத்து மாநில முதல்வர்கள், யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநர்கள், மத்திய அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர்.

### சாதனை

- **"அமிருத சரோவர்"** திட்டத்தின் கீழ் 50,000–க்கும் மேற்பட்ட நீர் நிலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் நீர்ப் பாதுகாப்பை உறுதி செய்யும்.

### குறிப்பு

- **நிதி ஆயோக் நிறுவப்பட்டது** – 1 ஜனவரி, 2015.
- நிதி ஆயோக்கிற்கு முன்பு, **1950** மார்ச் 15 அன்று அமைக்கப்பட்ட **திட்டக்குழு** செயல்பட்டது.

### முதல் டிஜிட்டல் சென்சஸ்

- மே 22 ஆம் தேதி உள்துறை அமைச்சர் அமித்ஷா மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையரின் அலுவலகமான **ஜங்கனனா பவனைத்** திறந்து வைத்தார்.
- "மொபைல் செயலி" மூலம் முதல் டிஜிட்டல் சென்சஸ்.
- பொது மக்கள் தங்களைப் பற்றிய சுய விவரங்களை, நேரடியாக அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

### குறிப்பு:

- **1881 முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு** 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.

### மக்களுக்கிடையேயான தொடர்பை வலுப்படுத்தும் "யுவ சங்கமம்"

- **மத்திய கல்வி அமைச்சகத்தின் "யுவ சங்கமம்"** முன்னெடுப்பானது, மக்களுக்கு இடையேயான தொடர்பை வலுப்படுத்த உதவும் என, "மனதின் குரல்" நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

### குறிப்பு:

- வானொலி வாயிலாக **மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் "மனதின் குரல்"** நிகழ்ச்சியில் **பிரதமர் மோடி** உரையாற்றி வருகிறார்.
- **முதல் நிகழ்ச்சி** – 3, அக்டோபர் 2014.
- கடந்த ஏப்ரல் மாதம் 2023, **100–ஆவது "மனதின் குரல்"** நிகழ்ச்சி உலகம் முழுவதும் சிறப்பாக ஒளிபரப்பானது.

## 7. சர்வதேச நிகழ்வு

### சி20 சர்வதேச மாநாடு

- "**உலகம் ஒரே குடும்பம்**" எனும் சின்மயா மிஷன் நடத்தும் சி 20 சர்வதேச மாநாட்டை ஆளுநர் ஆர்.என். ரவி தொடங்கி வைத்தார்.
- சி20 என்பது ஜி20–இன் அதிகாரப்பூர்வக் குழுக்களில் ஒன்றாகும். இது, உலகம் முழுவதும் உள்ள சிவில் சமூக அமைப்புகளுக்கும், ஜி20–க்கு மக்களின் எண்ணங்களை வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்குகிறது.
- **மாமல்லபுரம்** அடுத்த பூஞ்சேரியில் "உலகம் ஒரே குடும்பம்" (வசுதைவ குடும்பகம்) என்கிற சர்வதேச மாநாட்டு விழா நடைபெற்றது.

### WHO ஆடிட்டராக இந்தியாவின் CAG

- 2024 முதல் 2027 வரையிலான நான்கு ஆண்டு காலத்திற்கு **உலக சுகாதார அமைப்பின் (WHO) வெளித்–தணிக்கையாளராக இந்தியாவின்** (CAG) கன்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரல், **கிரஷ் சந்திர முர்மு** மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- **CAG கிரிஷ் சந்திர முர்மு** ஏற்கனவே WHO இல் 2019 முதல் 2023 வரை நான்கு வருட காலத்திற்கு இந்தப் பதவியை வகித்து வந்தார்.

### WHO–பற்றி

- **நிறுவப்பட்டது** – 1948
- **தலைமையகம்** – ஜெனீவா, சுவிட்சர்லாந்து
- WHO என்பது ஐக்கிய நாடுகளின் நிறுவனமாகும்.
- இது ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், உலகைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு சேவை செய்யவும் உதவுகிறது.

## 8. தமிழ்நாடு

### தொழிற்சாலைகள் சட்டம்

- **தொழிற்சாலைகளில் வேலை நேரத்தை நீட்டிக்க** தமிழக அரசின் சமீபத்திய சர்ச்சைக்குரிய **தொழிற்சாலைகள் சட்டம், 1948**ஐ திருத்தும் **மசோதா** திரும்பப் பெறப்பட்டுள்ளது.

### மசோதா பற்றி:

- பணியாளர்களுக்கு நெகிழ்வான வேலை நேரத்தை வழங்குகிறது.
- முதலாளிகள் தங்கள் ஊழியர்களின் ஒரு நாளைக்கான **வேலை நேரத்தை 12 மணிநேரமாக அதிகரிக்க** இது அனுமதிக்கிறது.
- இதில் ஊழியர்களின் விருப்பமும் அடங்கும்.

- மாநிலம் முழுவதிலும் உள்ள தொழிற்சாலைகளில் ஒரு நாளைக்கு எட்டு மணி நேர அட்டவணையில், இந்த மசோதா ஒரு **புதிய பிரிவை (பிரிவு 65A)** அறிமுகப்படுத்துவதன் மூலம் **தொழிற்சாலைகள் சட்டம், 1948 ஐ திருத்தியது.**
- இது தொடர்பான கட்டுப்பாடுகளில் இருந்து எந்த தொழிற்சாலைக்கும் விலக்கு அளிக்க மாநில அரசுக்கு இது உதவுகிறது.

## தமிழக மாநிலத் தொல்லியல் துறை: பொற்பனைக்கோட்டையில் அகழாய்வுப் பணிகள்

- தமிழக மாநிலத் தொல்லியல் துறையானது இந்த ஆண்டில் அகழ்வாராய்ச்சிகளைத் தொடங்கியப் புதிய தளங்களில் இதுவும் ஒன்றாகும்.
- இது கிராமத்தில் உள்ள ஒரு பழமையான கோட்டை குறித்தத் தகவல்களைக் கண்டறிய முயல்கிறது.
- இத்தளமானது **புதுக்கோட்டை** நகருக்கு கிழக்கே 6.5 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.
- இந்த பழங்கால நிலப்பரப்பில், **3 – 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நினைவு கல் (நடுகல்)** வடிவில் உள்ள பழமையான கற்காலச் சான்றுகள் இந்தத் தளத்தில் கண்டறியப் பட்டு உள்ளன.
- இது பூலாங்குறிச்சி கல்வெட்டின் சமகாலத்தியக் கல்வெட்டாக அறியப்படுகிறது.
- இந்த நடுகல்லானது, மாவீரன் கனங்குமரனுக்காக எழுப்பப்பட்டது.
- இவர் பொன்கொங்கர் விண்ணகோன் என்பவரால் இந்தக் கிராமத்தின் மீது நடத்தப் பட்ட கால்நடை வேட்டைத் தாக்குதலில் இறந்தச் சுற்றுப் படை வீரர் ஆவார்.
- இந்தச் சிதிலமடைந்தக் கோட்டையானது **கி.பி. 13–14 ஆம் நூற்றாண்டில்** கட்டப்பட்டு இருக்கலாம்.

## வேர்களை தேடி திட்டம்

- **சிங்கப்பூர்** தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து தமிழ் கலைப் பண்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் அங்கமாக, "**வேர்களைத் தேடி**" எனும் **அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான திட்டத்தை** தொடங்கி வைத்தார் **முதல்வர் ஸ்டாலின்.**

## "நம்ம ஊரு சூப்பரு" பிரச்சாரம்



- **கள்ளக்குறிச்சி மாவட்ட** நிர்வாகமானது, **"நம்ம ஊரு சூப்பரு"** என்ற முன்னெடுப்பினைச் செயல்படுத்தி உள்ளது.
- அந்த மாவட்டத்தின் கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் **சிறப்பான சுகாதாரச் சூழல்கள்** மற்றும் தூய்மை சூழல்கள் ஆகியவற்றினை உறுதி செய்வதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குடிநீர், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதில் இந்தப் பிரச்சாரம் கவனம் செலுத்தும்.

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை

- **குடிமக்கள் மற்றும் பெரு நிறுவனங்களுடன்** இணைந்து மாநிலத்தில் விளையாட்டுத் துறையினை மேம்படுத்துவதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்த அறக்கட்டளையின் பணியானது, விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு, மேம்படுத்துதல் மற்றும் ஆதரித்தல் ஆகியவையாகும்.
- இது **அதிநவீன விளையாட்டு உள்கட்டமைப்பு** மற்றும் பல விளையாட்டு வசதிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### i – தமிழ்நாடு தொழில் நுட்ப (iTNT) மையம்

- தமிழ்நாடு முதலமைச்சர் **i–தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையத்தினை** காணொளி வாயிலாக திறந்து வைத்தார்.
- iTNT மையமானது, மாநிலத்தில் உள்ள சிக்கலான சவால்களைத் தீர்ப்பதற்காக **செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல் மற்றும் தொடர்சங்கிலித் தொழில் நுட்பங்கள்** போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை ஒருங்கிணைக்கும்.
- இந்த மையமானது **சென்னை அண்ணாப் பல்கலைக்கழக வளாகத்தில்** 54.61 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

### குறிப்பு:

- மத்திய அரசானது இதற்கு 50% நிதியை அளித்துள்ளது.
- இதற்கு தமிழக அரசாங்கமானது 37 சதவீதமும் மற்றும் தொழில்துறைகள் 13 சதவீதமும் பங்களித்துள்ளன.